அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

RCOP: 38/2012

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி.P.காயத்திரி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 04-ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| எ.சா.1 | 04.09.2025 |
| பெயர் ராஜா | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

(மனுவின் பெயரில் திருப்பி அழைக்கப்பட்டு) முதல் விசாரணை தொடர்ச்சி:-

1. எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் செலுத்திய வாடகை தொகைக்கான E Challan ரசீதுகள் எ.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை:-

1. நான் அனைத்து மாதங்களும் வாடகை செலுத்தியதை காட்டுவதற்கான ஆவணமாக தான் எ.சா.ஆ 9 ரசீதுகளை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதில் முதல் 2 ரசீதுகள் 12.04.2021 ஏப்ரல் மாதத்தில் கட்டியுள்ளேன் அது எந்த மாதத்திற்கான வாடகை தொகை என்றால் மார்ச் 2021. 3வது ரசீது 11.03.2021 கட்டியுள்ளேன் அது எந்த மாதத்திற்கான வாடகை தொகை என்றால் பிப்ரவரி 2021. நான் 11.03.2021 தேதியிட்

செல்லான் கட்டியதற்கு நீதிமன்றத்தில் இருந்து செல்லான் 06.02.2021 அன்று வழங்கப்பட்டது என்றால் சரிதான். நவம்பர் மாததில் 12.11.2021 ரூபாய் 9000 கட்டியுள்ளேன் என்றாலும் அது எந்த மாதங்களுக்கான வாடகை தொகை என்றால் சரியாக தெரியாது. 14.02.2023 அன்று கட்டியுள்ள வாடகை தொகை ஜனவரி மற்றும் பிப்ரவரி 2023 மாதங்களுக்கானது. 09.08.2024 ரூபாய் 27000 எந்த மாதங்களுக்காக கட்டினேன் என்றால் ஆகஸ்ட் 2024 ற்கு முன்னிட்டு 5 மாதங்களுக்கு கட்டினேன். 19.06.2025 ரூபாய் 13,500 எந்த மாதங்களுக்காக கட்டினேன் என்றால் ஜீன் மாததிற்கு 2 மாதங்கள் முன்பு சேர்த்து கட்டினேன். நான் எவ்வளவு தொகைக்கு வாடகை செலுத்துகிறேனோ அதற்கு தான் நீதிமன்றத்தில் செல்லான் வழங்குவார்கள் என்றால் சரிதான்.

2. 20.04.2023 அன்று எந்த மாதங்களுக்காக கட்டினேன் என்றால் நான் பக்கத்து கடைக்கு சேர்த்து கட்டிய ரசீது இதில் தவறாக வந்துள்ளது. நான் ஜனவரி 2021 முதல் ஜீன் 2025 வரை சுமார் 50 மாதங்களுக்கு எ.சா.ஆ 9 ஆவணம் மூலம் சுமார் 30 ரசீதுகள் வழியாக வாடகை செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான். மற்ற ரசீதுகள் நீதிமன்ற கோப்பில் தான் உள்ளது. நான் நீதிமன்றத்தில் செலுத்தியுள்ள வாடகையில் 5 ம் தேதியிக்குல் நீதிமன்றம் உத்தரவிட்டவாறு செலுத்தவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எப்போது நீதிமன்றத்தில் இருந்து செல்லான் வழங்கப்பட்டதோ அப்போது தான் வாடகை தொகை செலுத்திவருகிறேன்.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.